# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2301/33 - 2022 ඔක්තෝබර් මස 12 වැනි බදාදා - 2022.10.12

*2301/33 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 3/2002*

**2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2002 ஆம் ஆண்டின் 25 இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், குற்றவியல் கருமங்களில் பரஸ்பர சட்ட உதவியளித்தல் மீதான பிம்ஸ்ரெக் (பல்துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு) சமவாயத்திற்கு திறத்தவர்களான நாடுகள் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன். இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நாடுகளுக்கிடையே கையொப்பமிடப்பட்ட இச்சமவாயம் குற்றவியல் கருமங்களில் சட்ட பரஸ்பர உதவியை வழங்குவதற்குச் செய்துகொள்ளப்பட்டது. பயங்கரவாதம், நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல், போதைப்பொருள் வியாபாரம், பணம் தூய்தாக்கல் மற்றும் இணையவெளிக் குற்றச் செயல்கள் தொடர்பான குற்றச் செயல்கள் உள்ளிட்ட குற்றச் செயல்களைத் தடுத்தல், புலனாய்வு செய்தல், அவற்றுக்கெதிராகக் குற்ற வழக்குத் தொடுத்தல் மற்றும் அவற்றை ஒடுக்குதல் தொடர்பாகச் சீராக்கப்பட்ட பயனுள்ள ஒத்துழைப்பு மற்றும் அத்தகைய குற்றச் செயல்கள் மற்றும் குற்றச்செயலின் எவையேனும் வரும்படிகள் அத்துடன் குற்றச் செயலின் சாதனங்களினது நிதியளிப்புக்காகப் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட நிதிகளை கண்டுபிடிக்க, கட்டுப்படுத்த, இழப்பிக்க, முடக்க அல்லது பறிமுதல் செய்ய வழிமுறைகளை எடுத்தலுடன் மற்றவற்றுக்கிடையே சம்பந்தப்பட்டுள்ளதுடன் தொடர்பாக கவனம் செலுத்த இரண்டாயிரத்து இருபத்தி இரண்டாம் ஆண்டு மாச்சு மாதம் முப்பதாம் நாளன்று கொழும்பில் செய்து கொள்ளப்பட்டது.

சனாதிபதி சட்டத்தரணி கலாநிதி **விஜயதாச ராஜபக்ஷ,**<br>
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்<br>
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,<br>
2022, ஒற்றோபர் 07.


1A - G 37756 — 56 (2022/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
2. பூட்டான் இராச்சியம்
3. தாய்லாந்து இராச்சியம்
4. நேபாளம்
5. பங்களாதேஷ் மக்கள் குடியரசு
6. இந்தியக் குடியரசு
7. மியன்மார் ஒன்றியக் குடியரசு

EOG *10 - 0095*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.